முழுப் பதிப்புரிமையுடையது All Rights Reserved]


கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு Ministry of Education, Ministry of Education, Ministry of Education

கல்வி அமைச்சு

தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கிளை - தமிழ்மொழி அலகு

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை - 2023(2024)

**General Certificate of Education (Ord. Level) Examination - 2023(2024)**

*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

தமிழ் மொழியும் இலக்கியமும் **I, II**
**Tamil language and literature I, II**

**22** **T** **I,II**

மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்

**அறிவுறுத்தல்கள் :**
- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- வினாத்தாள் 1 ற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.
- 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

சுட்டெண் : ....................................

- **தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. “அசைந்தாடும் கிலுகிலுப்பை பழக ஒரு மரப்பாச்சி” இங்கு **மரப்பாச்சி** என்பது
   1. மரப்பலகை 2. மரவுரி 3. மரப்பொம்மை 4. மரவீடு

2. “வள்ளலடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ” இங்கு **வள்ளல்** என்பது
   1. கொடையாளி 2. இறைவன் 3. உலோபி 4. உயர்ந்தவர்

3. ‘நகலெடுக்கும் மெசின்கள் வருவதற்கு முன்னரான ஒரு காலம்’ இங்கு **நகல்** என்பதன் எதிர்ப்பதம்
   1. பிரதி 2. போலி 3. அச்சு 4. அசல்

4. ‘அறத்தின் உருவம் போல்வான்’ இங்கு **உருவம்** என்பதன் எதிர்ப்பதம்
   1. அருவம் 2. சொரூபம் 3. படிமம் 4. வடிவம்

5. ‘இந்திய பண்பாட்டின் 75 விழுக்காடு திராவிட பண்பாடு ஆகும்’ இங்கு **விழுக்காடு** என்பது
   1. சதவீதம் 2. பிரதேசம் 3. அருவி 4. வனாந்தரம்

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

6. பின்வருவனவற்றுள் **தொடர்பற்ற** சொற்களின் இணைப்பு
   1. மரம் - தோப்பு 2. பூ - மஞ்சரி 3. முத்து - மாலை 4. மயில் - குழாம்

7. பின்வருவனவற்றுள் ஒரே தொகுதியில் அடங்குவன
   1. சுக்கு, மிளகு, கடுகு 2. மனம், வாக்கு, காயம்
   3. நித்தியம், நைமித்தியம், சத்தியம் 4. பழம், காய், கிழங்கு

8. ஆயுள் முழுவதும் பிரம்மச்சாரிய விரதம் காத்து வாழ்பவன்
   1. நைட்டிகன் 2. சந்நியாசி 3. துறவி 4. கிருகஸ்தன்

9. ‘மாறிவரும் டிஜிட்டல் (**Digital**) உலகிற்கு ஏற்ப கல்வியும் மாற்றமடைந்து வருகின்றது’ **டிஜிட்டல்** என்பதற்கு நிகராக தமிழில் வழங்கும் சொல்

1. எண்மானம் 2. படிமம் 3. திண்மம் 4. ஒருங்குறி

10. ‘தமது வலியை அங்கவஸ்திரத்தில் ஆவாகனம் பண்ணி பக்கத்தில் வைப்பார்’ இங்கு **ஆவாகனம்** என்பது

1. அனுபவித்தல் 2. வெறுத்தல் 3. குணமாக்கல் 4. நிலைநிறுத்தல்

11. ‘அன்னமிட்ட வீட்டில் கன்னம் இடாதே’ எனும் பழமொழிக்கு **பொருத்தமற்றது**

1. உப்பிட்டவரை உள்ளளவும் நினை 2. உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்யாதே
3. உண்ணாச் சொத்து மண்ணாய் போகும் 4. பால் குடித்த வீட்டிற்கு பாதகம் செய்யாதே

12. ‘பாடம் ஏறினும் ஏடது கைவிடேல்’ எனும் பழமொழி எதன் சிறப்பை உணர்த்துகிறது?

1. முயற்சி 2. உழைப்பு 3. செல்வம் 4. கல்வி

13. ‘பிறக்கும் போதே சிறப்புடன் பிறப்பது’ எனும் பொருள் தரும் அருஞ்சொற்றொடர்

1. கருவிலே திருவுடையோர் 2. ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி
3. அருமை பெருமை அறிந்து 4. ஒல்காப் பெரும் புகழ்

14. பின்வருவனவற்றுள் அடுக்குத்தொடர்

1. குடுகுடு 2. நெடுநெடு 3. படபட 4. சிலுசிலு

15. ‘அத்தி பூத்தாற் போல’ எனும் உவமைத்தொடரின் பொருள்

1. மிகச் சிறப்பு 2. மிக அரிது 3. பயனுள்ளது 4. தொடர்ச்சியானது

16. ‘மயில்வாகனம் தன்னுடைய அறுபதாவது பிறந்தநாளை கொண்டாடினார்’ அறுபதாம் ஆண்டு கொண்டாடப்படும் விழாவின் பெயர்

1. வெள்ளிவிழா 2. பொன்விழா 3. மணிவிழா 4. அமுத விழா

17. ‘இம்மென்னும் முன்னே எழுநூறும் அம் என்றால் ஆயிரம் கேள்வி வந்து விழுந்தன’ இங்கு **இம், அம்** எனும் ஒலிக்குறிப்பு சொற்கள் உணர்த்தும் பொருள்

1. மிகுதி 2. சிறப்பு 3. ஆக்கம் 4. விரைவு

18. அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றைக் குறிக்கும் தொகைச் சொல்

1. நாற்பொருள் 2. நாற்படை 3. நாற்குணம் 4. நாற்றிசை

19. ‘‘கிட்டிப்புள்ளும் பம்பரமும் கிறுகியடிக்கப் பாலாறு’’ இங்கு இடம்பெறும் **கிறுகி** என்பது எப்பிரதேச கிளைமொழி

1. வடக்கு 2. கிழக்கு 3. மேற்கு 4. தெற்கு

20. பின்வருனவற்றுள் பாரசீக மொழிச்சொல்லாக அமைவது

1. கதிரை 2. கச்சேரி 3. மைதானம் 4. தகவல்

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகச்சரியான விடையைத் தெரிவு செய்க.**

21. பின்வருனவற்றுள் ககரம் **g** என்ற ஆங்கில எழுத்துக்கு நிகராக ஒலிக்கும் சொல்

1. மோகம் 2. பகல் 3. கப்பல் 4. பங்கம்

22. பின்வருனவற்றுள் ஆக்கப்பெயராக அமையும் சொல்

1. நண்பன் 2. கணையாழி 3. பங்காளி 4. அன்பன்

23. ‘மாணவருக்குரியது ஒழுக்கம்’ இங்கு **கு** உருபு உணர்த்தும் பொருள்

1. கொடை 2. தகுதி 3. முதற்காரணம் 4. நிமித்தக்காரணம்

24. திரிதல் விகாரம் இடம்பெற்றுள்ள சொல்

1. கற்சிலை 2. மனவேதனை 3. கபடமனம் 4. கண்ணிமை

25. ‘சுடுசோறு’ என்பது

1. வேற்றுமைத்தொகை 2. வினைத்தொகை 3. பண்புத்தொகை 4. உம்மைத்தொகை

26. ‘களவெடுத்தாலும் பொய் சொல்லாதே’ இங்கு உம் இடைச்சொல் உணர்த்தும் பொருள்

1. இழிவு 2. எதிர்மறை 3. உயர்வு 4. உடன்பாடு

27. பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் குன்றிய வினையாக அமைவது

1. படித்தான் 2. உண்டான் 3. சென்றான் 4. எடுத்தான்

28. அகராதி ஒழுங்கில் அமைந்த சொற்றொகுதி

1. பட்டம், பள்ளம், பக்குள், பருந்து
2. காப்பு, காகம், காலம், காட்சி
3. தம்பி, தத்தை, தண்ணீர், தச்சன்
4. மேகம், மேசை, மேதினி, மேழி

- **29, 30 ஆம் வினாக்களில் பொருத்தமற்ற உதாரணங்கள் இடம்பெற்றுள்ள சொற்றொகுதியைத் தெரிவு செய்க**

29.
1. ஆக்கப்பெயர் - முயற்சி, கோர்வை, புவியியல்
2. கூட்டுப்பெயர் - நீர்யானை, புத்திசாலி, தொலைபேசி
3. மாற்றுப்பெயர் - நான், நீ, அவன்
4. தொழிற்பெயர் - படித்தல், வந்தமை, போகாமை

30.
1. பெயரெச்சம் - வந்த, உண்ட, பெய்த
2. வினையெச்சம் - போய், கற்று, நின்று
3. தற்பவம் - புருடன், இலக்குமி, அபிடேகம்
4. தற்சமம் - கமலம், குங்குமம், அரன்

- **புள்ளிக்கோடிட்ட இடத்தினை நிரப்புவதற்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

31. ரவி விபத்துக்குள்ளான வாகனத்திற்கு..............................செய்திருந்தான்.

1. இழப்பீடு 2. முதலீடு 3. காப்புறுதி 4. பாதுகாப்பு

32. ஊழல் தொடர்பாக இலஞ்ச ஊழல்.............................. விசாரணையை முடுக்கிவிட்டது

1. முறைப்பாட்டுக்குழு
2. ஆணைக்குழு
3. நடவடிக்கைக்குழு
4. விசாரணைக்குழு

33. எமது நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காக பல நிறுவனங்கள்............................. செய்தன.

1. காப்பீடு 2. விளம்பரம் 3. இழப்பீடு 4. முதலீடு

34. கண்ணன் கண்காட்சியைப் பார்வையிடுவதற்கு ............... பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினான்.

1. நுழைவுச்சீட்டு 2. பருவச்சீட்டு 3. உறுதிச்சீட்டு 4. பற்றுச்சீட்டு

- **வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க**

35. அரசாங்கம் இதுவரை காலமும் ஒவ்வொரு மாகாணத்திற்கும் தனித்தனியான அறிக்கைகளை .........

    1. வெளியிட்டு வந்தன
    2. வெளியிட்டு வரும்
    3. வெளியிட்டு வருகின்றது
    4. வெளியிட்டு வந்தது

36. விலங்குகளோடும் பறவைகளோடும் சேர்ந்து வேடன் தானும் காட்டு வளத்தை ...............

    1. பாதுகாத்தன
    2. பாதுகாத்தான்
    3. பாதுகாப்போம்
    4. பாதுகாக்கும்

- **தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

வண்ணக் கலாப - மயில்
பண்ணிய கூத்தை - அங்கு
வெண்முத்து மல்லிகை கண்டு சிரித்தனள்!
மேல்முத்தை வான் சொரிந்தான்!
விண்முத் தணிந்தாள் - அவள்
மேனி சிலிர்த்தாள்! - இதைக்
கண்ணுண்ண உண்ணக் கருத்தினி லின்பக்
கடல்வந்து பாய்ந்திடுதே!

37. இப்பாடலினூடாக கவிஞர் வெளிப்படுத்த விழைந்தது

    1. மயில் தோகை விரித்து ஆடியமை
    2. மல்லிகை பூத்தமை
    3. இயற்கை நிகழ்வால் இன்பம் ஏற்பட்டமை
    4. வானில் நிலவு தோன்றியமை

38. ‘மேல்முத்தை வான் சொரிந்தான்’ என்ற தொடர் மூலம் உணர்த்தப்படுவது

    1. மேலான முத்துக்களை வானம் சொரிந்தது
    2. மேலே தான் முத்துக்கள் கொட்டும்
    3. முத்துக்கள் வானத்துக்கு மட்டுமே சொந்தம்
    4. வானத்தில் நட்சத்திரங்கள் தோன்றுதல்

39. ‘கருத்தினி லின்பக் கடல் வந்து பாய்ந்திடுதே’ என்பதனூடாக வெளிப்படுத்தப்படும் பொதுத்தன்மை

    1. வெளிப்படையானது
    2. எல்லையில்லாதது
    3. உயர்வானது
    4. இரகசியமானது

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

    அ. மக்களின் வாழ்க்கையானது ஐவகை நில அடிப்படையில் பகுக்கப்பட்டிருந்தன

    ஆ. அவ் ஆதாரங்களின் மூலமாக மக்களின் வாழ்க்கை முறைமைகளை அறிய முடிகின்றது.

    இ. இச்சங்ககாலம் பற்றி அறிவதற்குப் பல ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

    ஈ. பிற்கால மக்களின் வாழ்க்கை முறைமைக்கும் அதுவே அடிப்படையாக அமைந்தது

    உ. தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்ககாலமே முதலாவது காலகட்டம் என கூறப்படுகிறது

    1. அ, உ, இ, ஆ, ஈ
    2. ஆ, இ, ஈ, அ, உ
    3. இ, அ, ஈ, ஆ, உ
    4. உ, இ, ஆ, அ, ஈ

கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு Ministry of Education Ministry of Education Ministry of Education

கல்வி அமைச்சு

தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கிளை - தமிழ்மொழி அலகு

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை - 2023(2024)

**General Certificate of Education (Ord. Level)Examination - 2023(2024)**

தமிழ் மொழியும் இலக்கியமும் **II**
**Tamil language and literature II**

**22 T II**

**கவனிக்குக.**

- ❖ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.
- ❖ இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

**01) சுருக்கமான விடை எழுதுக.**

1. பின்வரும் தொடரை சந்திப் பிரித்து எழுதுக.
   ‘‘பதியிழந்தனம் பாலனை யிழந்தனம்’’

2. ‘‘நேற்று கடைக்குப் போன சமயம் அவன் கலாவிடம் விசாரித்தான்’’- இவ்வாக்கியத்தில் இடம்பெற்ற எழுவாய், பயனிலை என்பவற்றைக் குறிப்பிடுக.

3. பின்வரும் பேச்சுவழக்குத் தொடரை, எழுத்து வழக்கில் தருக.
   ‘‘பக்கத்து வீட்டம்மாவை பாத்துக்கொள்ளச் சொல்லிவிட்டு வந்தனான்’’

4. பின்வரும் வாக்கியத்தைப் பொருத்தமான நிறுத்தற்குறிகளை இட்டு எழுதுக.
   பெண்டிர் தமையுடையீர் பெண் பாவமன்றோ பெரிய வசை கொள்வீரோ

5. ‘‘கல்’’ என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வரத்தக்க ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.

6. பின்வரும் வாக்கியத்தைப் பொருள் மயக்கம் நீக்கி எழுதுக.
   பழைய பாடசாலை கட்டடங்கள் புனரமைக்கப்பட்டன.

7. ‘‘சீதமணி நெடு வானக்குளத்திடை வெண்ணிலாவே..’’
   இதில் பயின்று வந்துள்ள அணி யாது?

8. அ) மாணவர்கள் வைத்தியசாலைக்குச் செல்வதற்கு சீருடையுடன் வருகை தரவும்.
   ஆ) மரதன் ஓட்டப்போட்டியில் கலந்துக் கொள்வதற்கு மருத்துவச்சான்றிதழ் அவசியமாகும்.

   இவ்விரு வாக்கியங்களில் அறிவித்தலாக, அமைந்த வாக்கியம் எது? அறிவுறுத்தலாக அமைந்த வாக்கியம் எது?

9. ‘‘அரிசியோடு மண் கலந்திருக்கிறது’’ - இங்கு ஓடு உருபு உணர்த்தும் பொருள் யாது?

10. கண்ணன் கொழும்பிற்குப் போயிருந்தான், இருப்பினும் அவன் வீடு திரும்பவில்லை.
    இங்கு இடம்பெற்றுள்ள மாற்றுப்பெயரைக் குறிப்பிடுக.

**(2 X 10 = 20 புள்ளிகள்)**

**02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. தெரிவு செய்த விடயத்திற்குப் பொருத்தமான தலைப்பு இடுக.**

(i). பண்டைய காலத்தில் வீதிகள் அபிவிருத்தி அடைந்திராத போதும் வீதி விபத்துகள் குறைந்த நிலையிலேயே நிகழ்ந்தன. எனினும், தற்காலத்தில் வீதிகள் புனரமைக்கப்பட்டு, உயர்தரமாக்கப்பட்ட நிலையில் நாளாந்தம் அதிகளவிலான வீதி விபத்துக்கள் ஏற்பட்ட வண்ணமே உள்ளன. இதனால் பல்வேறு பாதிப்புகள் ஏற்படுகின்றன. இதனைக் கருத்திற் கொண்டு ஒரு **விளக்கக் கட்டுரை.**

(ii). இன்றைய காலத்தில் பெண்கள் பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி வருகின்றனர். பெண்கள் வீட்டிற்குள் இருந்த காலம் போய் விண்ணையும் தாண்டி மிளிர்கின்றனர். என்ற போதும் இன்றும் பெண்கள் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்து வாழ்கின்றனர். இவ்வாறான விடயங்களை வலியுறுத்தி மகளிர் தினத்தில் நீர் நிகழ்த்தும் **மேடைப்பேச்சு.**

(iii). தற்காலத்தில் இணையவழிக் கல்வி மாணவர்களை பெரிதும் கவர்ந்துள்ளது. இணையவழிக் கற்கை பல முன்னேற்றகரமான அம்சங்களைக் கொண்டுள்ள போதிலும் பல புதிய வகையிலான சிக்கல்களையும் தோற்றுவித்துள்ளது. அவ்வகையில், இணையவழிக் கல்வியால் நன்மைகளே பெரிதும் ஏற்படுகின்றன எனக்கருதும் ஒருவருக்கும், தீமைகளே பெரிதும் ஏற்படுகின்றன எனக்கருதும் மற்றொருவருக்கும் இடையிலான ஓர் **உரையாடல்.**

(iv). அப்பா இறந்தததால், மூத்த பிள்ளையான நான் குடும்பப் பொறுப்பை சுமக்க வேண்டி வந்தது. சிறிய வயதில் கூலி வேலை சொல்லணா துன்பங்களை தந்தது. இருந்தாலும், கூலி வேலைக்காக என்னைச் சேர்த்துக் கொண்ட தம்பையா முதலாளியின் வழிகாட்டலில் இப்போது கடையொன்றிற்கு முதலாளியாக இருக்கிறேன் என எண்ணும் மோகனின் விடாமுயற்சியை வெளிப்படுத்தும் ஒரு **சிறுகதை**.

**(25 புள்ளிகள்)**

**03.** பின்வரும் உரைப்பகுதியின் **சுருக்கத்தை 40 - 45** சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

தென்னாட்டில் தொன்மைச் சிறப்புடன் விளங்கி வருவது தமிழ்ப்பண்பாடு. இப்பண்பாடு தொன்று தொட்டு இன்று வரை உயிரத்துடிப்போடு நின்று நிலவி வருகிறது. உலகம் அறிந்தவற்றுள் சிறந்தவற்றிலும் சிந்தித்தவற்றுள்ளே சிறந்தவற்றிலும் தமிழ்ப்பண்பாடு தன்னிகரற்று விளங்குகிறது.

இன்று ஆயிரத்திற்கு மேற்பட்ட மொழிகள் இந்திய மக்களால் பேசப்பட்டு வருகின்றன. அவற்றுள் மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக பேசப்பட்டு வரும் மொழி, இலக்கிய வளமிக்க மொழி, சிறந்த பண்பாட்டு ஊற்றாய் விளங்கும் மொழி, உலகப் பழம்பெரும் நாகரிகங்களோடு தொடர்புடையதாகத் திகழும் மொழி தமிழ் மொழியே ஆகும். சமஸ்கிருத மொழி நீங்கலாக உள்ள பிற இந்திய மொழிகளின் தோற்றம், வளர்ச்சி எல்லாம் கடந்த ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்குள் அடங்கிவிடுகின்றன. இந்தியத் தொல் மொழியாக விளங்கும் தமிழ்மொழி உலகின் உயர் தனிச்செம்மொழிகளுள் ஒன்றாக விளங்குவது இங்குக் கருதத்தக்கதாகும்.

இந்திய நாகரிகம் நெடுங்காலத்திற்கு முன்பே கடல் கடந்த அயல்நாடுகளுக்குச் சென்று பரவியுள்ளது. மொகஞ்சதாரோ, ஹரப்பா பண்பாட்டுக்காலம் முதல் இன்று வரை இந்தியாவிற்கு வெளியே கடல்கடந்த நாடுகளில் எல்லாம் சென்று பரவியுள்ள இன்றைய இந்திய மொழி தமிழ்மொழியே என்பது மறுக்க இயலாத உண்மை.

**(10 புள்ளிகள்)**

**04.** பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

கி.பி ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை சோழர் காலமாகும். இக்காலத்தில் உலகப் புகழ்பெற்ற பல காப்பியங்கள் தமிழில் தோற்றம் பெற்றன. ஐம்பெரும் காப்பியங்களுள் சிலப்பதிகாரம், மணிமேகலை தவிர்ந்த வளையாபதி, சீவக சிந்தாமணி, குண்டலகேசி, ஐஞ்சிறு காப்பியங்களான சூளாமணி, உதயகுமார காவியம், நாக குமார காவியம், நீலகேசி, யசோதர காவியம் மற்றும் மாபெருங்காப்பியங்களான கம்பராமாயணம், பெரிய புராணம், கந்தபுராணம் முதலானவை இக்காலத்திலேயே தோற்றம் பெற்றன. தமிழில் காவியங்கள் அதிகமாக தோற்றம் பெற்றதால் இக்காலப்பகுதியைக் காவியகாலம் எனவும் அழைப்பர்.

கம்பர், ஒட்டக்கூத்தர் போன்ற கவிச்சக்கரவர்த்திகளும் இராஜராஜசோழன், இராஜேந்திர சோழன் போன்ற புவிச்சக்கரவர்த்திகளும் இக்காலத்தைச் சேர்ந்தவர்களே. சிறந்த படைபலமும் கடற்படையையும் கொண்டிருந்த சோழமன்னர்கள் யாவா, சுமாத்திரா, மலேசியா, இலங்கை போன்ற நாடுகளையும் கைப்பற்றி ஆட்சி செய்தனர்.

1. சோழர் காலம் காவிய காலமென குறிப்பிடப்படுவதற்கான காரணங்கள் யாவை?
2. சோழர்காலத்தில் தோற்றம் பெறாத காப்பியங்களாக கூறப்படுபவை எவை?
3. இக்காலத்தில் வாழ்ந்த சிறந்த புலவர்களாகக் கூறப்படுபவர்கள் யாவர்?
4. சோழ மன்னர்கள் கைப்பற்றிய நாடுகள் எவை?
5. சோழர்பெருமன்னர் காலம் வீழ்ச்சியடைந்த நூற்றாண்டு எது?

**(10 புள்ளிகள்)**

**05.** தற்போது தீவிரமாக பரவி வரும் 'வெள்ளை ஈ' தாக்கம் காரணமாக தென்னை, மா, வாழை போன்ற பல விளைச்சல் தருகின்ற மரங்கள் பாதிக்கப்படுகின்றன. இதனால், எதிர்காலத்தில் இவற்றின் மூலம் கிடைக்கப் பெறுகின்ற விளைச்சலானது குறைவடைய வாய்ப்பிருகிறது. எனவே, இது தொடர்பாக மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த தாமரை இளைஞர் மன்றத்தின் செயலாளர் அ.தேவகாந்தன் என உம்மைக் கருதிக் கொண்டு பின்வரும் விடயங்களை உள்ளடக்கியதாக, கம்பன் பத்திரிகையில் பிரசுரிக்குமாறு கோரி, பத்திரிகையின் பிரதம ஆசிரியருக்கு 100 சொற்களில் கடிதம் ஒன்று எழுதுக.

- வெள்ளை ஈ தாக்கத்திற்குள்ளாகும் மரங்கள்
- மரங்களுக்கு உண்டாகும் பாதிப்புகள்
- கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள்.

**அல்லது**

தங்கத்தாரகை தமிழ் மகா வித்தியாலயத்தின் தமிழ் மன்ற செயலாளராக உம்மைக் கருதிக்கொண்டு, இப்பாடசாலையில் நடைபெற்ற முத்தமிழ் விழா தொடர்பான அறிக்கை ஒன்றினை பின்வரும் அம்சங்களை கருத்திற் கொண்டு 100 சொற்களில் எழுதுக.

- பாடசாலையின் பெயர் - காலமும் நேரமும் இடமும்
- பிரதம, சிறப்பு அதிதிகள்
- நிகழ்ச்சிகள், அனுசரணையாளர்கள்

**(15 புள்ளிகள்)**

கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி
Ministry of Education, Ministry of Education, Ministry of Education, Ministry of Education, Ministry of Education, Ministry of Education, Ministr

**கல்வி அமைச்சு**

**தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கிளை - தமிழ்மொழி அலகு**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை - 2023(2024)

**General Certificate of Education (Ord. Level) Examination - 2023(2024)**

*இரண்டு மணித்தியாலம்*
***Two hours***

தமிழ் மொழியும் இலக்கியமும் **III**
**Tamil language and literature III**

**22 T III**

**அறிவுறுத்தல்கள் :**

- அறிவுறுத்தலுக்கேற்ப **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- **1, 2, 3, 4** ஆகிய வினாக்களுக்கும் **5, 6, 7** ஆகிய வினாக்களில் ஏதாவது **ஒரு** வினாவிற்கும் விடை எழுதுக.
- இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

**1. சுருக்கமான விடை தருக.**

(i) “...நீர் நணிப் படிகோ டேறிச் சீர் மிகக் கரையவர் மருளத் திரையகம் பிதிர...”

(அ) **கோடு** என்பதால் கருதுவது யாது?
(ஆ) **‘சீர்மிகு கரையவர்’** என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

(ii) “..அன்று நடந்த கூட்ட நிகழ்ச்சியோடு பிறிற்றோவின் பிரதிநிதித்துவக் கதை நின்றுவிட்டது.”

(அ) பிரதிநிதித்துவம் எதற்குரியது?
(ஆ) அந்த கூட்ட நிகழ்ச்சிக்கு வழங்கப்பட்ட பெயர் யாது?

(iii) “...நிலை மாறுந் தன்மையுள்ள அரசியற் கொள்கையைக் கைவிடுவேன்; நிலைமாறாத இயல்புள்ள சத்திய வாக்கைக் கடைப்பிடிப்பேன். இது தான் அரசனது முடிபு.”

(அ) இங்கு குறிப்பிடப்பட்ட அரசன் யார்?
(ஆ) **கைவிடுவேன்** என்பதனால் உணர்த்தப்படுவது யாது?

(iv) “..நெடுமையாலன்றளந்த வுலகெலாம் தன் மனத்தே செய்யுறும்
கொடுமையா லளந்தாளை யாரிவரென் று...”

(அ) நெடுமையால் உலகை அளந்தவர் யார்?
(ஆ) கொடுமையால் உலகை அளந்தவர் யார்?

(v) “அடக்கம் உடையார் அறிவிலார் என்று எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா...”

(அ) ‘அடக்கமுடையவர்’ என்பதால் கருதப்படுபவர் யார்?
(ஆ) ‘கடக்க’ என்பதன் பொருள் யாது?

(vi) “..மேல் நாள், நம் உரிமை அறக் கவர்ந்த பெருந் துணைவன், உனை வெறாத வண்ணம்..”

(அ) ‘அறக்கவர்ந்த’ என்பதால் கருதப்படுவது யாது?
(ஆ) ‘துணைவன்’ எனக் குறிப்பிடப்படுவன் யார்?

(vii) “..வந்து விட்டாயா! வந்து விட்டாயா! என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டேன். நான் கம்பியூட்டரைப் பார்த்தேன்.

(அ) ‘வந்து விட்டாயா’! என்ற தொடரில் விளிக்கப்படுவது எது?
(ஆ) ‘நான்’ என குறிப்பிடப்பட்டவர் யார்?

(viii) “ஒருமைச் செயல்அற்றும் பேதை எழுமையும்
தான்புக்கு அழுந்தும் அளறு”

(அ) ஒருமை, எழுமை என்பதால் கருதுவது யாது?
(ஆ) ‘புக்கு’ என்பது கொள்ளும் கருத்து என்ன?

(ix) “...தாலாட்டில் அசைந்திருந்த தொட்டில் வரை ரத்த வெள்ளம்..”

(அ) தால் என்பது குறிக்கும் கருத்து யாது?
(ஆ) ‘ரத்த வெள்ளம்’ என்பது எவ்வகை அணியாகும்?

(x) “..கதிகள் யாவும் தருமென லோர் ந்திடார்.
கண்ணில்லாதவர் போலத் திகைப்பர் காண்.”

(அ) கதிகள் என்பது யாது?
(ஆ) இங்கு இடம்பெற்றுள்ள உவமானம் யாது?

**(2 X 10 = 20 புள்ளிகள்)**

**2. பின்வரும் செய்யுட்பகுதிகளையும் உரைநடைப்பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

(i) தண்டா மரையி னுடன் பிறந்தும் தண்டேன்
நுகரா மண்டுகம்
வண்டோ கானத் திடையிருந்து வந்து
கமல மதுவுண்ணும்
பண்டே பழகியிருந்தாலும் அறியார்
புல்லர் நல்லோரைக்
கண்டே களித்தங் குறவாடித் தம்மிற்
கலப்பர் கற்றோரே

(அ) இப்பாடலில் வெளிப்படும் அறிவுடையோர் இயல்பு யாது?
(ஆ) அறிவில்லாதவர்களின் இயல்பு பற்றி கூறப்படும் உவமையை விளக்குக.

(ii) அறந்தானே யென்கின்ற லயனின்றா
டனை நோக்கி, யைய வன்பி
னிறைந்தாளை யுரையென்ன, நெறிதிறம்பாத்
தன்மெய்யை நிற்ப தாக்கி,
இறந்தான் றனிளந்தேவி யாவர்க்குந்
தொழுகுலமா மிராமன் பின்பு
பிறந்தானு முளனென்னப் பிரியாதான்
றனைப் பயந்த பெரியா ளென்றான்.

(அ) இப்பாடலில் வெளிப்படும் சுமித்திரையின் சிறப்புக்களைத் தருக.
(ஆ) இலக்குவணனின் பெருமைகளாகக் கூறப்படுபவை யாவை?

(iii) ‘..என் இதயம் கழன்று
அவன் இட்ட
ஒப்பத்தின் மேல் விழுந்து
கத்தியது
பின் கருகிப் பற்றியது

அவன் காதல் உணர்வுகளை என்னென்று ஒருத்திக்கு
எழுதுவான் வருங்காலம்
அழகு முகம்
கீழுதடு இரத்தச் சிவப்பு
பெண் விழுவாள் இவற்றில் மயங்கி
காகம்போல் அவன் விழுந்தவளின் வேலி ஓரமெல்லாம்...’

(அ) கவிஞரின் வேதனை எவ்வாறு வெளிப்படுகின்றது?
(ஆ) இளைஞன் பற்றிய வர்ணிப்பைத் தருக?

(iv) தந்தையில்லை..... தந்தையின் தேரில்லை.... பறம்பு மலையை, பறம்பு மலையில் பால் வார்க்கும் நிலவை.... சங்கவை எப்படி எடுத்துச் செல்வது?

பறம்பு மலை மக்களின் அன்பை எப்படி விட்டுச் செல்வது? குறவர்கள்... கானவர்கள்... எயினர்கள்.. தந்தையின் பிரிவில் விதிர்த்துப் போய்விட்டார்கள்.

முற்றுகை நடந்த போது இந்தப் பெண்கள் மலை முகட்டிலிருந்து பகைவர்களுடைய குதிரைகளை விளையாட்டாக எண்ணிக் கொண்டிருப்பாங்க...

அவ்வளவு நம்பிக்கை... தங்கள் பாரியும்.. பறம்பும் வீழாது என்று... கொஞ்சமும் அஞ்சாமல்...

(அ) பாரிமகளிரின் கையறுநிலை எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது?
(ஆ) பெண்கள் குதிரைகளை விளையாட்டாக எண்ணக் காரணம் என்ன?

(v) “என அருச்சுனன் இதனை அறுதியிட்டுக் கூறுகின்றான். அவனது இலட்சியம் மானம் அதுவும் மாண்பு கடவாத மானம். உயிரைத் துறந்தாவது மானத்தைக் காப்பதே மக்களுக்கு வரிசையும், குடிப்பிறப்பும், மரபுமாகுமென முழங்குகின்ற அருச்சுனனது வாழ்விலே இலட்சியம் முதலிடம் பெறுகின்றது. உயிருக்கு இரண்டாமிடமே கிடைக்கின்றது. இலட்சியவாதிகள் தமக்கோர் இன்னல் வந்தபோது அவ்வின்னலைக் களைதற்காக இலட்சியத்தை விடுவதா, உயிரை விடுவதா? என்கின்ற சிக்கலான நிலையிலே உயிரைச் சமாதானமாக விட்டு இலட்சியத்தை நிலைநாட்டும் உறுதிபூண்டு நிற்பார்கள்.”

(அ) அருச்சுனனது இலட்சியம் பற்றி கூறப்பட்டவற்றைத் தருக.
(ஆ) உயிருக்கு இரண்டாமிடமே கிடைக்கின்றது. எனும் தொடர் மூலம் உணர்த்துவது யாது?

**(4 X 5 = 20 புள்ளிகள்)**

3. **எது நல்ல சினிமா** என்ற கட்டுரையில்,
(அ) ஆரம்பகால சினிமாவில் நாடகத்தின் பண்புகள்
(ஆ) சினிமாவின் சீரழிவிற்கான காரணங்கள்
என்பன தெளிவுபடுத்தப்படுமாற்றை விளக்குக.

**அல்லது**

**மூத்தம்மா** என்ற சிறுகதையில்,
(அ) மூத்தம்மா
(ஆ) காசிம்
ஆகியோரின் குணப்பண்புகள் வெளிப்படுமாற்றை தெளிவுபடுத்துக. **(15 புள்ளிகள்)**

4. **திருக்குற்றாலக் குறவஞ்சியில்** மலைவளம் கூறும் பகுதியில்

(அ) மக்களின் செயற்பாடுகள்

(ஆ) திரிகூட இராசப்பக்கவிராயரின் கவியாற்றல்

என்பனற்றினை தெளிவுபடுத்துக

**அல்லது**

**குழந்தையென எனது மனம் குதூகலிக்கும்** எனும் கவிதையில்,

(அ) முல்லை, மருத நில சிறப்புக்கள்

(ஆ) பறவைகள், விலங்குகள் செயற்பாடுகள்

என்பன விபரிக்கப்படுமாற்றினை விளக்குக.

**(15 புள்ளிகள்)**

- **5,6,7** ஆகிய வினாக்களுள் ஏதாவது **ஒன்றைத்** தெரிவுசெய்து விடை எழுதுக.

5. **பாரதியாரின் சுயசரிதையில்**,

(அ) பாரதியாரின் காதல் உணர்வு

(ஆ) இப்பகுதியில் கையாளப்பட்டுள்ள அணிகள்

என்பவற்றை விளக்குக.

6. **"ஆசைக்கிளியே என்ர ஆசியத்து உம்மாவே.."** என்ற காதற் பாடலில்,

(அ) இஸ்லாமிய சமூகம் சார் அம்சங்கள்

(ஆ) காதலி பற்றிய வருணனைகள்

என்பன இடம்பெற்றுள்ள வகையினை விளக்குக.

7. **தனிப்பாடல்** பகுதியில்

அ. சீதக்காதியின் கொடைச் சிறப்பு

ஆ. காளமேகப் புலவரின் கவிச்சிறப்பு

என்பன விபரிக்கப்படுமாற்றை தெளிவுபடுத்துக

**(10 புள்ளிகள்)**